# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under Ministry of Education, Government of India)

40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

सत्यमेव जयते


## சுவடியியல் புலம்

நடத்தும்

## செம்பதிப்பு உருவாக்கத்திற்கு உரைமேற்கோள்களின் பங்களிப்புகள்

## பயிலரங்கம் - 10

**(10.11.2021 – 16.11.2021)**

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ் உரை மரபு மிகத் தொன்மையானது. இன்று கிடைத்திருப்பனவற்றுள் மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் முன்னரே உரை நூல் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன. என்றாலும் இறையனார் களவியல் உரை தொடக்கமாகவே உரைகள் நமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இந்த உரை எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக அறியவருகின்றது. இதற்குப் பின்னர் ஒன்பதாம் நூற்றாண்டில் 'தமிழ்நெறி விளக்கம்' எனும் இலக்கண நூலுக்கு அந் நூலாசிரியரே உரை எழுதியுள்ளதையும், பத்தாம் நூற்றாண்டில் மணக்குடவர் திருக்குறளுக்கும், ஆத்திரையன் பேராசிரியன் தொல்காப்பியம் பொதுப்பாயிரப் பகுதிக்கும் உரை எழுதியுள்ளதையும் அறியமுடிகின்றன. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களுக்குப் உரை நூல்கள் பல எழுதப்பட்டுள்ளன.

உரை இல்லாமல் மூல நூலை வாசிக்கும் வழக்கமும் தமிழில் இருந்துள்ளது. தொல்காப்பியம் உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்திருந்தமையைப் பேராசிரியர் உரையால் அறியமுடிகின்றது. தொல்காப்பியத்தின் கற்பியலில் பல இடங்களிலும், செய்யுளியலில், மரபியலில் சில இடங்களிலும் 'சூத்திரத்தால் பொருள் விளங்கும்' குறிப்புகள் காணப்படுகின்றன. 'இவ்வோத்திற் சூத்திரத்தாற் பொருள் விளங்குவனவற்றிற்கு உரை எழுதுகின்றிலம்' என இளம்பூரணர் உரை எழுதியிருப்பதைக் காணமுடிகின்றது. இளம்பூரணர் சொல்லதிகார இடையியல், உரியியல்களிடத்துப் பெரும்பாலான நூற்பாக்களில் உரை என்னும் பொருளுரை எழுதாது விட்டிருப்பதையும் காணமுடிகின்றது. நச்சினார்க்கினியரும் சீவகசிந்தாமணியில் பொருள் தெரியும் பல பாடல்களுக்கு உரை எழுதாது 'பொருள் வெளிப்படை' என்று கூறியிருப்பதும் இங்கு எண்ணுதற்குரியன. இப்படியான சிற்சில உரை வழக்குகள் இருந்தாலும்கூட பரந்துபட்ட விவாதங்களை நிகழ்த்தி உரை எழுதிச் செல்லும் வழக்கம்தான் பெரும்பான்மையாக உரை மரபில் இருந்துள்ளன.

## உரை மேற்கோள்

தம் கருத்திற்கு வலுசேர்க்கும் வகையில் பிறருடைய கருத்தைச் சான்றாகத் தரும் மரபு உரை மரபில் உண்டு. அந்தக் கருத்தை மேற்கோள் என்பர். இந்த மேற்கோள்களைப் பல வகையாகப் பகுத்து நோக்குவதுண்டு.

முன்னோர் முடிவுகளை ஆதாரமாகக் காட்டித் தமது கருத்திற்கு அரண்சேர்ப்பது எனும் நிலையில் மேற்கோள்கள் முதல்நிலைச் சான்றுகளாக அமைகின்றன. இலக்கண உரைகளில் இலக்கணத்துடன் இலக்கிய மேற்கோள்களைப் பொருத்திக் காட்டுவதன்வழி இலக்கண, இலக்கிய ஒப்பீட்டுநிலைப் பயன்பாட்டிற்கு மேற்கோள்கள் பயன்படுகின்றன. உரையாசிரியர்களுக்கு ஒரு கருத்தினை மறுக்கும் நிலையில், அதற்கான சான்றாகவும் மேற்கோள்கள் அமைகின்றன.

பண்டைய உரையாசிரியர்கள் காட்டியுள்ள மேற்கோள்கள் நமக்கு அப்படியே கிடைத்துள்ளனவா? உரையாசிரியர்களின் மேற்கோள்களில் காணப்படும் பாட வேறுபாட்டு முறைமைகள் என்னென்ன? அப் பாடவேறுபாடுகள் புதிய பதிப்பு ஆக்கத்திற்கு எவ்வகையில் துணைசெய்கின்றன? என்பனவற்றை ஆராய்ந்து நோக்குவது மிகவும் அவசியமாக அமைகின்றன. இவ்வகை ஆராய்ச்சி முயற்சியால் உரை மரபின் புலமைத்துவத்தை அறிந்துகொள்வதற்கும், நம் சமகால ஆய்வுக்குத் துணையாகக் கொள்வதற்கும் வழி ஏற்படக்கூடும்.

-------------------

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செவ்வியல் நூல்களாக வரையறுத்துள்ள தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் தமிழ் நூல்களுக்கும் செம்பதிப்பை உருவாக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. செம்மொழி நிறுவனச் செம்பதிப்பு ஆக்கத்திற்கு உரையாசிரியர்களின் உரைக் குறிப்புகளும், உரை மேற்கோள் பாடல்களும் பெருந்துணையாக அமைகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு ‘செம்பதிப்பு உருவாக்கத்திற்கு உரைமேற்கோள்களின் பங்களிப்புகள்’ என்னும் பொருண்மையிலான இப்பயிலரங்கைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியல் புலம் ஒருங்கிணைத்து நடத்தவுள்ளது. இத்துறை சார்ந்த கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

இப்பயிலரங்கமானது, தமிழ் உரை மரபு, உரை மரபுகளில் மேற்கோள்கள், அந்த மேற்கோள்கள் செம்பதிப்பு ஆக்கத்திற்குத் துணைசெய்யும் முறைமைகள் முதலானவற்றை எடுத்துரைக்கும் வகையில் உரை மரபு, பதிப்புத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு 10.11.2021 முதல் 16.11.2021 ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 10.11.2021 முதல் 16.11.2021 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.

4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 31.10.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 01.11.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

செம்பதிப்பு உருவாக்கத்திற்கு உரைமேற்கோள்களின் பங்களிப்புகள்

**<u>பயிலரங்கம்</u>**

**நிழற்படம்**

**(10.11.2021 – 16.11.2021)**

## விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பதவி/பணிநிலை | | |
| | நிரந்தரம்/தற்காலிகம் | | |
| 4. | பிறந்த நாள்/ வயது | | |
| 5. | பாலினம் | | |
| 6. | வகுப்பு (✓ செய்க) | | பொது ☐ இ.பி.வ. ☐ பட்டியல் இனத்தவர் ☐ |
| 7. | கல்வித் தகுதிகள் | | |
| 8. | பணியில் சேர்ந்த நாள் | | |
| 9. | நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 11. | புலன எண் | | |
| 12. | சிறப்பறிவு பெற்றுள்ள துறை | | |
| 13. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 14. | தாங்கள் பணியாற்றும் கல்வி | | |

| | | |
|---|---|---|
| | நிறுவனம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம் / இல்லை ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும் | |

நாள் : **(கையொப்பம்)**
இடம்:

**உரிய முத்திரையுடன்**
**முதல்வர்/ பதிவாளரின் கையொப்பம்**